**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 006/ந/2022
நாள். 27/04/2022

| | | |
|---|---|---|
| திரு. P. சம்பத்,<br>திருக்கோவிலூர். | – | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையாளர்,<br>திருக்கோவிலூர் நகராட்சி. | – | எதிர்மனுதாரர் |

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர், என்.ஜி.ஓ. நகர், எண்.218/1, ஆஞ்சநேயர் கோவில் தெரு, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P. சம்பத், என்பவரின் 26.11.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 006/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர், என்.ஜி.ஓ. நகர், எண்.218/1 ஆஞ்சநேயர் கோவில் தெரு, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P. சம்பத், என்பவர் தனது மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

திருக்கோவிலூர் பேரூராட்சியில் (தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது) தற்காலிக பணியாளர்களுக்கு:–

- ஊதியம் குறைத்து வழங்குவது
- சீருடை வழங்காதது
- மழை கோட்டு வழங்காதது

- கையூறை வழங்காதது
- தள்ளுவண்டி சரிசெய்யாதது
- உலகளந்த பெருமாள் கோவில் தெப்பகுளம் வாய்க்கால் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாதது.
- கழிவுநீர் பைப்போட்டது பணம் தராதது.

மேற்கண்ட ஏழு குற்றச்சாட்டுகள் குறித்த விரிவான அறிக்கையை அனுப்பிவைக்குமாறு திருக்கோவிலூர் நகராட்சி ஆணையாளர் 29.01.2022 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

2) இந்நேர்வில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான திருக்கோவிலூர் நகராட்சி ஆணையர் ஆகியோரை 22.03.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 17.03.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

22.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் மனுதாரர் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்ப்பித்தார்.

“கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் நகராட்சியில் (முன்னார் பேரூராட்சி) மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு, மாவட்ட ஆட்சியரின் ஆணையின்படி நாள் ஒன்றுக்கு ரூபாய் 561/–ஊதியம் வழங்காமல் குறைந்த ஊதியமே அதாவது நாள் ஒன்றுக்கு ரூபாய் 390/– மட்டுமே வழங்குகின்றனர். மேலும், அங்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் துாய்மைப் பணியாளர்களுக்கு சீருடை, மழை கோட்டு, கையுறை போன்ற பொருட்களும் முறையாக வழங்கப்படவில்லை. திருக்கோவிலூர் நகராட்சியில் உள்ள தள்ளு வண்டிகள் டையர் தேய்ந்து பழுதடைந்த நிலையில் உள்ளது. அதனையும் நகராட்சியினர் சரிசெய்யவில்லை. மேலும், அந்நகராட்சியில் உலகளந்த பெருமாள் கோவில் தெப்பகுளம் வாய்க்கால் ஆக்கிரமிப்புகள் நகராட்சியால் அகற்றப்படவில்லை. எனவே, மேற்கண்ட குறைகளைப் போக்கிட தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்வீட்டின் கழிவுநீர் செல்லும் பாதையை சரிசெய்திடும் பொருட்டு பைப்போட்ட செலவு ரூ.35,610/–ஐ, திருக்கோவிலூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் திரும்பத்தருவதாக வாய் மொழியாக தெரிவித்த தொகையை, 8 மாத காலம் கடந்துவிட்ட

நிலையில் இன்னும் தரவில்லை என்றும் எனவே, அதனை எனக்கு உடன் திருப்பிதர ஆவன செய்யும்படியும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

3) 22.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் திருக்கோவிலூர் நகராட்சி ஆணையர் ஒப்பந்தப்புள்ளி தொடர்பான பணியில் ஈடுபட்டுள்ளதால் அவரது ஒப்புதலுடன் சுகாதார ஆய்வாளர் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்.

''கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் நகராட்சியில் (முன்னார் பேரூராட்சி) மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு, மாவட்ட ஆட்சியரின் ஆணையின்படி துாய்மைப் பணியாளர்களுக்கு தினக்கூலியாக ரூபாய் 390/– வழங்கப்படுகிறது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும், துாய்மைப் பணியாளர்களுக்கு சீருடை, மழை கோட்டு, கையுறை போன்ற பொருட்களும் முறையாக வழங்கப்பட்டு வருகின்றன. நிரந்தரப் பணியாளர்களுக்கு மேற்கண்ட பொருட்கள் வழங்கியது தொடர்பான ரிஜிஸ்டரை இம்முறைமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன். ஆனால், ஒப்பந்த துாய்மைப் பணியாளர்களுக்கு (Out sourcing workers) வழங்கப்பட்டதற்கான ரிஜிஸ்டரை இம்முறை மன்றத்தில் சமர்பிக்க இயலவில்லை எனவும், மேற்கண்ட அனைத்து ரிஜிஸ்டர்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பித்திட ஒருவார கால அவகாசம் அளிக்கும்படியும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நகராட்சி ஆணையர் அளித்துள்ள 21.3.2022 நாளிட்ட கடிதத்தையே எனது மேல்வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

4) திருக்கோவிலூர் நகராட்சி ஆணையாளர் தமது 21.03.2022 நாளிட்ட அறிக்கையில்

- அரசு விதிகளின்படியும் மற்றும் வருகை பதிவேட்டின்படி உரிய ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.
- ஆண்டு தோறும் ஜனவரி மாதத்தில் அனைத்து துாய்மை பணியாளர்களுக்கு 2022 நடப்பாண்டு வரை சீருடை வழங்கப்பட்டுள்ளது.
- மழைக்கோட்டு வழங்கப்பட்டுள்ளது.
- தேவையான கையுறைகள் இருப்பில் வைக்கப்பட்டு அனைத்து பணியாளர்களுக்கும் அவ்வப்போது வழங்கப்படுகிறது.

- தள்ளுவண்டிகள் சீரமைக்கப்பட்டு தற்போது நல்ல நிலையில் பயன்பாட்டில் இருந்து வருகிறது.
- ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணிபுரியும் தூய்மைப்பணியாளர்களுக்கு ஒப்பந்த நிறுவனத்தின் வாயிலாக ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதில் நிலுவை ஏதும் இல்லை.
- நீர்நிலைகள் ஆக்கிரமிப்புகள் அகற்ற கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் மூலம் அகற்றப்பட வேண்டும் என நீதிமன்ற ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணி செய்தவருக்கு தொகை காசோலையாக வழங்கப்பட்டு விட்டது என்று தெரிவித்துள்ளார்.

5) மனுதாரரின் மனு, அவரது வாக்குமூலம், திருக்கோவிலூர் நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, ஆணையாளர் சார்பாக விசாரணைக்கு ஆஜரான சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. திருக்கோவிலூர் நகராட்சியில் (முன்னர் பேரூராட்சி), ஒப்பந்த ஊழியர்களுக்கு மாவட்ட ஆட்சியரின் ஆணைப்படி நாள் ஒன்றுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் ரூ.561/– அதை வழங்காமல் ஊதியத்தை குறைத்து நாள் ஒன்றுக்கு ரூ.390/– மட்டும் வழங்குவதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். அதனை சுகாதார ஆய்வாளர் தமது வாக்குமூலத்தில் ஏற்றுக் கொண்டுள்ளார். இதிலிருந்து மாவட்ட ஆட்சியர் ஆணையின்படி வழங்கப்பட வேண்டிய ஊதியம் வழங்காமல் குறைவான ஊதியம் வழங்கப்பட்டது ஊர்ஜிதமாகிறது. சீருடை, மழைகோட்டு, கையுறை, போன்றவை நிரந்தர பணியாளர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒப்பந்தப்பணியாளருக்கு மேற்கண்ட பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படாததையும் விசாரணையில் அறியமுடிகிறது. மேலும் நகராட்சியில் உள்ள தள்ளுவண்டிகள் பழுது நீக்கம் செய்யப்பட்டு நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளதை விசாரணையில் அறியமுடிகிறது. ஆனால் ஒப்பந்த தூய்மை பணியாளர்களுக்கு மேற்கண்ட பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டதற்கான ரிஜிஸ்டரை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. இது சம்மந்தமான ரிஜிஸ்டரை சமர்ப்பிப்பதற்கு ஒரு வார கால அவகாசம் கோரினார். அதன்படி, திருக்கோவிலூர் நகராட்சி அலுவலகத்திலிருந்து 06.04.2022 அன்று சம்பந்தப்பட்ட பதிவேடு (ரிஜிஸ்டர்) இம்முறைமன்ற நடுவத்தின் பார்வைக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

இப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில், சீருடை, மழைகோட்டு, கையுறை போன்றவை ஒப்பந்த பணியாளர்களுக்கு வழங்கப்பட்டதற்கான பணியாளர்களின் கையொப்பம் பெறப்பட்டுள்ளது.

ஆனால் எந்த தேதிகளில் வழங்கப்பட்டதற்கான எவ்வித தேதியும் நகராட்சி அலுவலர்களால் குறிப்பிடப்படவில்லை, அதே போன்று, பணியாளர்களின் கையொப்பத்திலும் எவ்வித தேதியும் இல்லை. மேலும், சீருடை போன்ற பொருட்கள் நகராட்சியால் வழங்கப்பட்டமைக்கு பதிவேட்டில் துப்புரவு ஆய்வர் மற்றும் ஆணையாளர் எவ்வித சான்றொப்பமும் (Certificate) இடம் பெறவில்லை. இவற்றிலிருந்து ஒப்பந்த பணியாளர்களுக்கு சீருடை, கையுறை போன்ற பொருட்கள் வழங்கப்படவில்லை என இம்முறைமன்றம் கருதுகிறது.

மகளிர் சுயஉதவி குழுக்கள் மூலம் பணிபுரியும் ஒப்பந்த தூய்மைபணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியரின் ஆணையின்படி வழங்கப்பட வேண்டிய ஊதியத்தை வழங்காமல், செயல் அலுவலர் அவரின் விருப்பத்திற்கேற்ப ரூ.390/– வழங்கியிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. இதில் நிலுவை ஏதும் இல்லை என்று ஆணையர் தம் அறிக்கையில் தெரிவித்துள்ளார். ஆனால் அந்த நிறுவனத்திற்கு எந்த வகையில் தொகை வழங்கப்பட்டது என்பதற்கு ஆதார ஆவணம் சமர்ப்பிக்கப்படவில்லை.

திருக்கோவிலூர் நகராட்சியில் ஒப்பந்த பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கியது தொடர்பாக உரிய பதிவேடுகள் நகராட்சியினரால் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, ஒப்பந்தப் பணியாளர்களுக்கு எவ்வித பாதுகாப்பு உபகரணங்களும் வழங்கப்படவில்லை என்ற மனுதாரரின் குற்றச்சாட்டுகள் உண்மையாக இருக்கும் என இம்முறைமன்றம் கருதுகிறது.

உலகளந்த பெருமாள் தெப்பக்குளம் ஆக்கிரமிப்பு குறித்து ஆணையாளர், வட்டாச்சியர் மற்றும் கோட்டாட்சியருடன் கலந்தாலோசித்து ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்படி ஆணையிடப்படுகிறது.

மனுதாரர் கழிவுநீர் செல்லும் பாதையை சரிசெய்ய ரூ.35,610/– செலவு செய்ததாகவும், அதை திருக்கோவிலூர் செயல் அலுவலர் திரும்பத்தருவதாக வாய்மொழியாக தெரிவித்ததாகவும், எட்டு மாதங்கள் ஆகியும் இன்னும் தரவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் மனுதாரர் செலவு செய்ததற்கான ஆதாரத்தையோ, செயல் அலுவலரும் வாய்மொழியாக தெரிவித்தற்கான ஆதாரம் எதையும் சமர்ப்பிக்கவில்லை.

6) இவ்வாறு ஒப்பந்த ஊழியர்களுக்கு ஊதியம் குறைத்து வழங்கியும் அவர்களுக்கு பாதுகாப்பு சாதனங்களாக வழங்கப்படவேண்டிய எந்த பொருட்களையும் முறையாக வழங்காமலும் தன்னிச்சையாக செயல்பட்ட முன்னாள் செயல் அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் மீது

துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவரின் ஆணைப்படி ஒப்பந்த ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கிடவும், அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சீருடை போன்ற பொருட்களை முறையாக வழங்கிடவும், உலகளந்த பெருமாள் தெப்பக்குளம் ஆக்கிரமிப்பு குறித்து வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியருடன் கலந்து ஆலோசித்து உரியவிதிகளின் கீழ் நடவடிக்கையினை மேற்கொள்ளவும் திருக்கோவிலூர் நகராட்சி ஆணையாளருக்கு உத்தரவிடப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. P. சம்பத்,
218/1, ஆஞ்சனேயர் கோவில் தெரு,
N.G.GO. நகர், திருக்கோவிலூர்,
கள்ளகுறிச்சி மாவட்டம்.

2) ஆணையாளர்,
திருக்கோவிலூர் நகராட்சி.
கள்ளகுறிச்சி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

27/4/22

செயலாளர்

27/04/22